உ

சிவமயம்.

# சிவப்பிரகாசக்கட்டளை

இஃது

திரிசி. இராஜகோபாலசெட்டியா
ரவர்களால்
பரிசோதிக்கப்பட்டு

சைதாப்பேட்டை
கேசப்பசெட்டியார்குமாரராகிய
வீரபத்திரசெட்டியா
ரவர்களது
இலக்ஷுமிவிலாசஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

உருத்திரோற்காரி வருஷம் ஆடிமீ

உ

திருச்சிற்றம்பலம்!

# சிவப்பிரகாசக் கட்டளை

முதலங்கம்-தத்துவநாதம்.

உண்ணிலைக்காவிகள்

பூதங்களாவன; பிருதுவி; அப்பு, தேயு வாயு, ஆகாசம் ஆக ௫ ஞானேந்திரியங்களாவன! சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்ஙுவை கிராணம். ஆக ௫: தன்மாத்திரைகளாவன: சப்தம்|| ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆக ௫, கருமேந்திரியங்களாவன, வாக்கு, பாதம் பாணி, பாயு, உபஸ்தம், ஆக ௫, அந்தக்கரணங்களாவன|| மனம், புத்தி, அகங்காரம்; சித்தம், ஆக ௪, ஆக ஆத்துமதத்துவம்-௨௪ இதற்கு ஆத்துமதத்துவ-மென்றும். அசுத்தத்துவமென்றும்! போக்கியகாண்ட-மென்றும் பெயர்,

வித்தியாதத்துவங்களாவன, காலம்; நியதி, கலை, வித்தை, இராகம். புருடன் மாயை ஆக எ இதற்கு வித்தியாதத்துவமென்றுஞ் சுத்தாசுத்தத்தத்துவமென்றும். போககாண்டமென்றும்பெயர். ※

சிவதத்துவங்களாவன சுத்தவித்தை, ஈச்வரம், சாதாக்கியம், சத்தி சிவம் ஆக ௫- இதற்குச் சிவதத்துவமென்றும் சுத்ததத்துவமென்றும், பிரேரககாண்டமென்றும் பெயர், இவை ௩௬-ம் உண்ணிலைக்கருவிகள். ※

புறநிலைக்கருவிகள்

பிருதுவியின்கூறு - மயிர் - எலும்பு தோல், நரம்பு, தசை, ஆக ௫ அப்புவின் கூறு - ஒடு - நீர் - உதிரம் - சுக்கிலம் - மூளை - மச்சை - ஆக ௫ தேயுவின் கூறு - ஆகாரம் - நித்திரை - பயம் - மைதுனம். சோம்பு - ஆக ௫ வாயுவின் கூறு ஓடல் நடத்தல் - நிற்றல் - இருத்தல் - கிடத்தல் ஆக - ௫ - ஆகாசத்தின் கூறு - காமம் குரோதம் உலோபம் - மோகம் - மதம் - ஆக ௫ ஆசப்பூககரியம் - ௨௫ தசவாயுக்களாவன - பிராணன் - அபானன் - உதானன் வியானன் - சமானன் - நாகன் - கூர்மன் கிரிகரன் தேவதத்தன் - தனஞ்சயன்

ஆக ௰ - தசநாடிகளாவன - இடை - பிங்கலை - சுழுமுனை - காந்தாரி அத்தி - சிகுவை அலம்புடை - புருஷன் - குரு - சங்கினி ஆக ௰ வசனாதிகளாவன - வசனம் - கமனம் - தானம் - விசர்க்கம் - ஆனந்தம் ஆக ௫ வாக்குகளாவன - சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி - ஆக ௪ குணங்களாவன, சத்துவ, ரஜச தமச - ஆக ௩ அகங்காரங்களாவன தைசச கங்காரம் வைகாரிகா கங்காரம் - பௌதாதிகாகங்காரம் ஆக ௩ ஆக தத்துவம் - ௯௬.

முதலங்கத் தத்துவநாமம்

முற்றும்.

## இரண்டாமங்கம்

### தத்துவதோற்றமொடுக்கம்வருமாறு

பரமசிவனுடைய பராசத்தி யருளினாலே குடிலையிலே நாதந்தோன்றும், நாதத்திலே விந்துதோன்றும் விந்துவிலே, சாதாக்கியந்தோன்றும், சாதாக்கியத்திலே மாஹேஸ்வரந்தோன்றும், மாகேஸ்வரத்திலே - சுத்தவித்தைதோன்றும் - இவ்வைந்தினுள்மு

ல்சொன்ன விந்துவிலே நாலுவாக்கும் ஐம்
பத்தோரக்ஷரமும் எண்பத்தொரு பதமும்-
இருநூற்றிருபத்து நாலுபுவனமும் சத்த
கோடி மஹாமந்திரமும் சகலசாஸ்திரமும்-
விஞ்ஞானகலர், பிரளயாகலருக்குத் தனுகர
ணபுவனபோகங்களும் சரியை கிரியையோ
கங்களினிற்போர்க்குச் சாலோக சாமீப்பிய
சாரூப்பியமென்னும் பதமுத்திகளும் பஞ்
சகலைகளும்-தோன்றும் இவைசுத்தமாயையி
ல்தோற்றமென்றறிக. ※

இனிஅனந்த தேவநாயனாருளினாலே
அசுத்தமாயையிலேநின்று காலமும் - நியதி
யுங்கலையுந்தோன்றும் கலையிலே வித்தைதோ
ன்றும்-வித்தையிலே இராகந்தோன்றும். ※

இனி உத்திரதேவ நாயனாரருளினாலே
முன்சொன்னகலையிலே மூலப்பிரகிருதிதோ
ன்றும் மூலப்பிரகிருதியிலே முக்குணங்களு
ந்தோன்றும்-முக்குணங்களுந் தோன்று
நின்றவிடம் அவ்வியக்தம் இந்த அவ்வியக்த
த்திலே சித்தமும் புத்தியுந்தோன்றும் புத்
தியிலே - அகங்காரந்தோன்றும் அதுதான்
யாம்; எனதென்றுவிகற்பிக்குவரும் அதுதா
ன் அகந்தைக்குவித்தாகும் அதுதான் தைசா
கங்காரமென்றும், வைகாரிகாகங்காரமென்

றும்- பௌதாதிகாகங்காரமென்றும் - மூன்
றுவிதமாயிருக்கும்- தைசசாசரங்காரத்திலே
சத்துவகுணத்தினை யுடைய மனமும்புத்தி
யும், இந்திரியங்களென்றியெயனையுடைய-
சுரோத்திராதிகளைந்தும் தோன்றும் - வை
காரிகாகங்காரத்திலே ரஜோகுணத்தினை - யு
டைய கருமேந்திரியங்களாகிய வாக்காதிக
ளைந்தும்-தோன்றும் பௌதாதி, காகங்கார
த்திலே தமோகுணத்தினையுடைய தன்மாத்
திரைகளாகிய சத்தாதிகளைந்தும் தோன்றும்
சப்தத்திலே ஆகாசந்தோன்றும் - பரிசத்தி
லே வாயுதோன்றும் ரூபத்திலேதேயுதோன்
றும் ரசத்திலே அப்புத்தோன்றும்-சந்தத்தி
லே பிருதிவிதோன்றும் ஒடுங்குங் காலத்து
த்தோன்றினவடைவேயொடுங்கும்: *

இரண்டாமங்கம் - தோற்றமொடுக்கம்
முற்றும்

—(*)—

## மூன்றுமங்கம்.

## தத்துவகுணங்கள்.

பிருதிவி உரத்துத்தரிக்கும் அப்புகு
ளிர்ந்து பதஞ்செய்யும்-தேயுசுட்டொன்றுவி

க்கும் வாயு-சலித்தலையுந்திரட்டும் ஆகாச
ந் - நிரந்தரமாயிடங்கொடுக்கும் சுரோத்தி
ரஞ்-சப்தத்தையறியும் துவக்குஸ் - பரிசத்
தையறியும்-சட்சுரூபத்தையறியும் சிங்குவை
ரசத்தையறியும் கிராணங்கந்தத்தை யறியும்
வாக்கு வசனிக்கும் பாதங்கமனம்பண்ணும்
பாணியிடுதலுமேற்றலுஞ்செய்யும் பாயுமல
விசர்க்கத்தைச்செய்யும் உபஸ்தம் ஆனந்திக்
கும்மனம்பற்றும் புத்திநிச்சயிக்கும் அகங்
காரமெழுந்திருக்கும் சித்தஞ்சிந்திக்கும் கா
லஞ் செல்காலம் நிகழ்காலம் - எதிர்காலமெ
ன மூன்றும் நியதிகருமத்தை நிச்சயம்பண்
ணும் கலை-ஆணவத்தைச்சிறிதுநீக்கும் - வி
த்தை அறிவையெழுப்பும் இராகம் பெற்ற
தைச் சிறிதாக்கிப்பெறாததிலே-யிச்சையுண்
டாக்கும் புருடன் விடயத்திலே - அழுந்து
விக்கும் - மாயைமயக்கும் சுத்தவித்தைஞா
னமேறிக்கிரியைக்குறைந்திருக்கும்-ஈஸ்வரத
த்துவம் ஞானங்குறைந்து கிரியையேறியிரு
க்கும் சதாக்கியதத்துவம் ஞானமுங்கிரியை
யுமொத்திருக்கும்-சத்திதத்துவங் கிரியையா
யிருக்கும்-சிவதத்துவம் ஞானமாயிருக்கும்
சிவதத்துவம்-சிவனுக்கிடம் நாதமென்றும்
பெயர் சத்திதத்துவஞ் * சாருண்ணியத்துக்கி

டம்-விந்து வென்றும்பெயர் - சாதாக்கியத
த்துவம்-அனுக்கிரகத்துக்கிடம்-சதாசிவமெ
ன்றும்பெயர்- ஈஸ்வரதத்துவம் திரோபவத்
துக்கிடம்- மாஹேஸ்வரமென்றும் பெ
யர்-சுத்தவித்தைசங்காரத்துக்கிடம்உருத்திர
மென்றும்பெயர்..................................※

மூன்றாமங்கம்தத்துவகுணங்கள்

முற்றும்.

நான்காமங்கம்.

அவஸ்தைதரிசனம்.

---

கீழாலவஸ்தை.

இவற்றுடனேகூடிநின்று ஆத்மாபசிக்
கும் அவசரத்திலுணர்த்துமுறைமையெத்த
னமென்னில்..................................※

கீழாலவஸ்தை ௫ மேலாலவஸ்தை - ௫-
சுத்தாவஸ்தை-௫- இந்தக்கேவலசகல சுத்த
மூன்றிற் காரியாவஸ்தை-௰௫- காரணாவஸ்

ஐத-ரு-ஆ அவஸ்தை ௰அ — இதற்கீழாலாவ ஸ்தைக்குக் கர்த்துவம்-௫-மேலாலவஸ்தைக் குச்தத்துவம்-௩௰-அவையெப்படியென்னி ல் கீழாலவஸ்தையாவன சாக்கிரம் - சொப்ப னம்-சுழுத்தி-துரியம்-துரியாதீதம் - ஆகிய ௫-க்கு—அகக்கருவி - முப்பத்தாறிற் பூதங்க ளைந்துங்காலாதிகளாறுஞ்சிவதத்துவம்ஐந்து ம்-ஆகிய ௰௫-ம்-கழித்துமற்றவையுடனேபு றக்கருவிபறுபதில்வாயுக்கள்பத்தும் வசனாதி கள் ௫-ம்-ஆகிய-௰௫-ம்--கூட்டவேண்டும்- இவற்றை கூட்டவேண்டுவானேன் அவற்றை க்கழிக்கவேண்டுவானேனென்னில் அவஸ்தை க்குநிற்குங்கருவிகள் கூட்டப்பட்டு - நில்லா க்கருவிகள்கழிக்கப்பட்டன-ஆச்மா ஞானே ந்திரியங்களைந்தும் — கருமேந்திரியங்களைந் தும் தன்மாத்திரைகளைந்தும் அந்தக்கரண நாலுகும்-உள்ளமொமன்றும்-வாயுக்கள்பத்து ம்-வசனாதிகளைந்தும்-ஆகிய-௩௫--கருவிகளு டனேலலாடஸ்தானத்திலேநின்றவவசரம், சா க்கிரம்-ஞானேந்திரியங்கள் ௫-ம்-கருமேந் திரியங்கள்-௫-ம் ஆகிய-௰-ம்--லலாடஸ்தான த்திலேநிற்கமற்ற-௨௫-கருவிகளுடனேகண் டஸ்தானத்திலேநின்றவவசரம் சொப்பனம் தன்மாத்திரைகளைந்துஞ்-சித்தநீங்கலாக! அந்

தக்கரணங்கள்-௪-ம் பிராணவாயு - நீங்கலாக
வாயுக்கள்-௯-ம்.வசனாதிகள்-௫-ம் ஆகிய ௨௩
கருவி - களும்கண்டஸ்தானத்திலே நிற்கச்
சித்தமும்பிராணவாயுவுமுள்ளமும் ஆகிய-௩
கருவிகளுடனே யிருதயஸ்தானத்திலே நின்
றவவசரஞ்-சுழுத்தி-சித்தமொன்றும் இருத
யஸ்தானத்திலேநிற்கப்-பிராணவாயுவும் உள்
ளமும்-ஆகிய-இரண்டு கருவிகளுடனே நா
பிஸ்தானத்திலேநின்ற அவசரந்துரியம்பிரா
ணவாயுவொன்றும் நாபிஸ்தானத்திலேநிற்க
உள்ளமொன் றுடனேமூலாதாரத்திலே யட
ங்கினவவசரந்துரியாதீதம்-இப்படிக்கீழால
வஸ்தையைத்தரிசிக்கஇங்கேசவுள்ளமென்றது
பிரகிருதியை - யெனக்கொள்க இதற்குக்கே
வலாவஸ்தையென் றும்பெயர்,

கீழாலவஸ்தைதரிசனம் முற்றும்.

மேலாவஸ்தை.

மேலாலவஸ்தையாவன- இப்படிக்கேவ
லாவஸ்தையைப்பொருந்தி-௮-திதப்தபட்டுக்

கிடக்கும் அவசரத்திலுணர்ந்து - முறைமை
யெங்ஙனமெனில் - விளங்காநின்ற விந்
துசத்திஆத்மாவுக்குள்ள கருமத்துக் கீடாக
வாக்குகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு
ஒருநாதத்தையுண்டாக்கும்,

சூக்குமையென்னும்வாக்கு - அந்தநா
தமாகிய அறிவுகாரணவடிவாகவரும் பை
ந்தி என்னும்வாக்கும் உந்திஸ்தானத்திலே
பொருந்தி வெவ்வேறாய்வரும் அக்ஷரங்களி
னுடையசொரூபங்கள் தோன்றும் முறை
மைதெரியாதபடி மறைந்திருந்து மயில்மு
ட்டைக்குட்சலமானது புறம்பேமயிலின்ற
மாய்ரூபிரிக்கத்தக்கதாயிருந்தும் உள்ளே
பஞ்சவர்ணங்களுங்கூடி - உருத்தெரியாமற்ச
லமயமாய்த்தான்நின்றாற்போலச்சித்தத்தினி
டத்திலே நினைவுமாத்திரமாய்நிற்கும் மத்தி
மையென்னும்வாக்கு - பிராணவாயுவோடுங்
கூடி அக்ஷரங்களினுடைய - சொரூபங்களை
ஒழுங்குபடத்திரட்டிச்செவிக்கும் - கேளாமல்
உள்ளறிவுமாய்த்தெளியுமுண்டாய்க்கெண்
டஸ்தானத்திலேமுற்பட்டுவரும் வைகரியெ
ன்னும்வாக்கு பிராணவாயுவோடுங் கூடிவ
ந்து உதானவாயுவிலேயும் பற்றித்துச்செவி

ட்புலனிடத்துக்கேட்கத்தக்தாக நினைவிலுண்டான வசனத்தைச்சொல்லும். ✻

இங்கு சொல்லப்பட்ட வாக்குகளுக்குஸ்தானமும்வடிவுமாவன - சூக்குமைக்குஸ்தானம் நாபியடியும்வடிவு நாதத்துவமுமாம் வைசந்திக்குஸ்தானம்உந்தியும்வடிவுபிராணவாயுவுமாம்மத்திமைக்குஸ்தானம்நெஞ்சங்கண்டமும்வடிவுபிராணவாயுவுமாம் வைகரிக்குஸ்தானம் நாக்கினடியும்வடிவுபிராணவாயுவும்உதானவாயுவுமாம்இந்தநாலுவாக்குந்தோன்றுகைக்குகாரணமாயிருக்கின்றயுஞ்சமையென்றொருவாக்குண்டு - அதற்குஸ்தானம்மூலாதாரம்அது பிரணவசொரூபமாயிருக்கும்வாக்குநான்குங்காரியப்படுமுறைமை அறிவித்தது, சிவதத்துவமுஞ்சத்திதத்துவமும்சூக்குமையைக் காரியப்படுத்தும்- சாதாக்கியதத்துவம் வைசந்தியைக் காரியப்படுத்தும் ஈஸ்வரதத்துவம்மத்திமையைக் காரியப்படுத்தும்-சுத்தவித்தைவைகரியைக் காரியப்படுத்தும். ✻

இப்படிவாக்குநான்கினுமுணர்த்தஉணர்த்தஆத்மாசகலாவஸ்தைப்பட்டுவருகிறதெப்

படியெனில் கிரியாசத்திசத்திதத்துவத்தை யெழுப்பச்சத்திதத்துவங்காலத்தையும்நியதி யையுங்கலையையுமெழுப்பக்கலைதழற்போடி நீக்கினாற்போல ஆணவமலத்தைச்சிறிதேநீக் கஆச்மாகலையேவடிவாய்த்துரியத்திலேபிரா ணவாயுவைக்கூடிச்சுழுத்தனவன்.........*

இனிஞானசத்திசுத்தவித்தையையெழு ப்பச்சுத்தவித்தை வித்தையையெழுப்ப வி த்தைஆச்மாவுக்கறிவையெழுப்பும் இனிஇச் சாசத்திஈஸ்வரதத்துவத்தையெழுப்பஈஸ்வர தத்துவம்இராகதத்துவத்தையெழுப்ப இரா கதத்துவம்ஆத்மாவுக்கு இச்சையை எழுப்பு ம்இப்படிஆத்மா இச்சாஞானக்கிரியாசொரூ பனாயிருக்கு ஆத்மவானது காலம் . நியதிக லைவித்தைஇராகம் இவ்வைந்துந்தனக் குடம் பாகக்கொண்டு இந்திரியங்களுடனே கூடிச் சத்தாதிவிடயங்களைப்புசிக்கவருகிற அவத ரத்தைப்புருடதத்துவமென்று சொல்லுவர் ஆதலால் ஆத்மாவுக்குப்பஞ்சகஞ்சுகனென்று பெயர் இப்படிபுருடதத்துவமான அவதரத் திற்கிரியாசத்தி சாதாக்கிய தத்துவத்தையெ ழுப்பச்சாதாக்கியம்பிரகிருதியை யெழுப்ப ப்பிரகிருதி குணரூபமாய் ஆத்மாவைக்கூட

ஆத்மாகுணமேவடிவாய்ப்போகத்துக்கேது
வானகருவிகளைக்கூடாநிற்கும், இப்படிஆத்
மாகருவிகளைக் கூடிச்சொப்பனஸ்தனுவன்
சொப்பனஸ்தனுவன் அவதரத்திலுணர்த்து
முறைமைப் பதினைந்துபிரகாரமாயிருக்கும்
அவையெங்ஙனமெனில் அகங்காரம்புத்திமனம்
சித்தம்உள்ளம்என்னும்தத்துவங்களை அகார
உகாரமகாரவிந்துநாதம்என்னும் அக்ஷரங்க
ளெழுப்ப அந்த அக்ஷரங்களைப் பிரமாவிஷ்
ணுஉருத்திரன்மகேஸ்வரன் சதாசிவனென்
னும்அதிதேவதைகளெழுப்ப- ஆத்மா இவை
யேவடிவாய்ச்சூட்சுமதேகியாய்ச்சாக்கிரத்தி
ற் புசிப்பது போலச் சொப்பனத்திலும்
புசிக்கும்.

இனிஇவற்றுடனே சாக்கிரஸ்தனுவன்,
சாக்கிரஸ்தனுன அவஸ்தரத்திலுணர்த்துமுறை
மையெங்ஙனமென்னில் ஆகாசமிடமாகநின்
று சுரோத்திரத்தைப் பொருந்திச் சப்தத்
தையறிந்தால் வாக்கு வசனிக்கும்வாயுவிட
மாகநின்று துவக்கினைப் பொருந்திப் பரி
சத்தையறிந்தால் பாதங்கமனிக்கும்அக்கினி
யினிடமாக நின்று சட்சுவைப் பொருந்திரூ
பத்தை யறிந்தால் பாணியிடுதலு மேற்றலு

ஞ்செய்யும் - அப்புவினிடமாக நின்று சிங்ஙவையைப் பொருந்தி ரசத்தை யறிந்தால் பாயுமலசலத்தைவிடும் பிருதிவியினிடமாகநின்று கிராணத்தைப் பொருந்திக் கந்தத்தையறிந்தால் உபஸ்தமானந்திக்கும் இப்படிக்காரியப்படுகிற அவதரத்தில் ஞானசத்தி சிவதத்துவத்தையெழுப்பச் சிவதத்துவமாயை யெழுப்பமயைகுண ரூபமாய்நின்று மும்மூன்றொன்பது குணங்களாலேயும் பேதிப்பித்துப்பொய்யை மெய்யென்றும் மயக்காநிற்கும் குணங்களொன்பதாவன, சத்துவத்திலேசத்துவம், சத்துவத்திலேரஜசு, சத்துவத்திலேதமசு- ரஜசிலே ரஜசு, ரஜசிலேதமசு-ரஜசிலே தத்துவம்தமசிலேதமசு- தமசிலே சத்துவம்-தமசிலே ரஜசு என்பனவாம்-இதனாலே - ஆத்மாசனனமரணப்பட்டுவரும் - இதற்குச் சகலாவஸ்தையென்றும். பெயர் - இப்படி மேலாலவஸ்த்தை யைத்தரிசிக்க,

## மேலாலவஸ்தைதரிசனம்

மூற்றும்.

## சுத்தாவஸ்த்தை

---

சுத்தாவஸ்தையாவன சன்மவொப்பும் மலபரிபாகமு முண்டான அவதாரத்திலே ஞானாசாரியனாலே ஞானதீபத்தைப் - பெற்றுச்சிவனையும் ஆத்மாவையும் பாசத்தையும் உணர்ந்து அருள்பெறும் அவதர மெங்ஙனமென்னிற் பூதங்களை தரிசிக்கவே ஸ்தூல தேகமில்லையாம் இந்திரியங்களைத் - தரிசிக்கவே பூதங்களில்லையாம் அந்தக்கரணங்களைத் தரிசிக்கவே இந்திரியங்களில்லையாம் - கலாதிகளைத் - தரிசிக்கவே அந்தக்கரணங்களில்லையாம் சுத்ததத்துவங்களைத் தரிசிக்கவே கலாதிகளில்லையாம் அருளைத்தரிசிக்கவே சுத்தத்துவங்களில்லையாம். ※

இது நின்மலசாக்கிரம் நின்மலசொப்பனம் நிம்மலசுழுத்தி நின்மல துரியம் நின்மல துரியாதீதம்என-ரு-ஆம் - நிம்மலசாக்கிரமாவது பிரபஞ்சம் அநிந்தியமெனத்தோன்றி ஆசாரியரனுக்கிரகததினாலே பற்றுசப் புகுந்து பொறிபுலன் மேலிட்டபசுகரணங்கள் சிவகரணங்களாயிருக்கை நிம்மலசொ

ப்பனமாவது கண்டு கேட்டு உண்டு உயிர்த்து-உற்றுப் பொருந்துவனமனதிலேகோசரியாமலிருக்கை நின்மலசுழுத்தியாவது இந்தப்பேறு பெற்றேனென்னும் நிராசையினாலே பரிணாமத்தையடைகை - நின்மலதுரியமாவது தனக்கின்பம் பிறந்தசம் பூரண திசையையடைகை நின்மலதுரியாதீதமாவது முன்சொல்லப்பட்ட பேறு நான்குமின்றிப் பேறாய்விடுகை சம்பூரணதிசையிலேநீரிலே முழுகினவனைப்போலவும் நிறையவுண்டவனைப்போலவும் தானன்றிச்சுட்டன்றிச்சொல்லப்படாது இதற்குநின்மலாவஸ்தையென்றும்பெயர்.

இப்படிச்சுத்தாவஸ்தையைத்தரிசிக்க

சுத்தவஸ்தைமுற்றும்.

## காரணாவஸ்தை.

காரணாவஸ்தையாவன காரணகேவலமும்காரணசகலமும் காரணசுத்தமுமென-௩-ஆம்-காரணகேவலமாவது சர்வசங்காரகாலத்தி ஆத்மாக்கள் அசுத்தமாயா காரணத்தி

லேயொடுங்கிச்சிருட்டி காலமளவும் ஆண
வமலத்தாலே மறைப்புண்டு ஒன்றுமறியா
மற்கிடக்குமவதரமெனவறிக,

காரணசகலமாவது சிருஷ்டிதொடங்
கிச் - சர்வசங்காரம்வருமளவும் ஆத்மாக்கள்
எண்பத்துநான்குநூறாயிரமா யோனிபேத
த்திலும் பிறந்திருந்து திரிகிற வவதரமெ
னவறிக - காரணசுத்தமாவது இங்ஙனங்கே
வலசகலபட்டுப் பிறந்திறந்து திரியுமவசர
த்து - ஆணவமலபாகம்வந்து - ஆத்மாக்க
ளுக் - கிருவினையொப்புஞ் சத்தினிபாதமு
முண்டான வவசரத்துச்சிவன் ஆசாரியமூர்
த்தமாகவெழுந்தருளி இரட்சித்துத் தன
து திருவருளாலே ஞானத்தையுங் கடா
ட்சித்துப்பிரார்த்தந் தொலைந்தபின்பு தன
து பூரண - நிலையோடுங் கூட்டிக்கொண்ட
அவதரமெனவறிக.

காரணவஸ்தை-முற்றும்.

---

## தசகாரியம்.

தசகாரியமாவனதத்துவரூபம் தத்துவ
தரிசனம் தத்துவசுத்தி ஆத்மரூபம் ஆத்மத

ரிசனம் ஆத்மசுத்தி-சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம்சிவபோகம் என்பனவாம் தத்துவரூபமாவது அவற்றின் குணங்களைக் காண்கைதந்துவகரிசனமாவது அவை தன்னிடத்திலேநின்று சீவித்தமுறையைக்காண்கைதத்துவசுத்தியாவது அவைதனக்குவேறென்றறிந்துநீங்குகை ஆத்மரூபமாவது ஆத்மஞானமென்னும் அறிவேவடிவெனவறிகைஆத்மதரிசனமாவதுதத்துவங்கையறிந்துநீங்கியிவற்றினின்று நீங்கினவறிவுநானெனவறிகைஆத்மசுத்தியாவதுபந்தமுத்தியிரண்டிலும் சிவனுபகரிக்கிறானென்றுதன்னுடைய சுதந்தர ஆணையறிகை சிவரூபமாவதுதத்துவமுப்பத்தாறிற்கும் அப்பாலாய் வாக்குமனோதீதாகோசரமாய்ஞானமேவடிவாயிருப்பதெனவறிகைசிவதரிசனமாவது தத்துவமுப்பத்தாறையுமறிவித்துத்தரிசிப்பித்துநீக்கிஇவற்றினின்றுநீங்கிநிற்கும்ஆத்மாவையுந்தரிசிப்பித்துநிற்கின்றஞானமெனவறிகை சிவயோகமாவது இந்தஞானந்தன்னைவிட்டு நீங்காதென்றறிந்துதான் அதுவாய்நிற்கை சிவபோகமாவதுதான் அந்தநேயத்திலே நின்றழுந்திச் சிவத்தைப்பேறுகை.

ஆத்மரூபமாவது ஆத்மாவுக்குரூபஞ் சொல்லி ஆத்மா இச்சாஞானக்கிரியா சொரூபமாயிருக்கும்ஆத்மாவுக்குஇச்சையாவது விஷயங்களிலே சென்றுபற்றுதல் - ஆத்மாவுக்குஞானமாவது-இதுவிது வென்று பகுத்தறிதல் ஆத்மாவுக்குக்கிரியையாவது சர்வத்தையும்-தனதுவிடையமென்று பற்றுநின்றுசெய்துகொள்ளுதல்.

ஆத்மதரிசனமாவது ஆத்மாவினுடைய இச்சாஞானக்கிரியையைத் தரிசிக்குமாறு சொல் ஆத்மாவினுடைய இச்சைசீவிக்குமிடத்து அந்தக்கரணங்களி னிடமாக நின்று சீவிக்கும் ஆத்மாவினுடைய ஞானஞ்சீவிக்குமிடத்துக்கருமேந்திரியங்களினிடமாகநின்று சீவிக்கும்.

இவைகள் அடுத்ததின் தன்மையாதலினின்றொழிந்து தத்துவங்களைத்தா நன்றென்றுசுழித்து அருளைதனுவாகப் பொருந்தித்தத்துவங்களையுந்தன்னையும் அந்தஅருளையுந்தரிசிப்பது

ஆத்மசுத்தியாவது - ஆத்மசுத்தியைச் சொல்லுமிடத்துச்சிவனுமேலேதான் சர்வத்தையுமறியுமுறைமையுக்கண்டுசிவன் ஆத்மாவுக்குஅறியுமுறைமையுக்கொடானென்பதுக்கு

ண்டு சிவனுடைய ஞானசத்தியினாலே தன்னுடையஞானஞ்சீவிக்குமென்றறிந்துதான்மலமுமாகாமல்சிவமுமாகாமல்நிற்கிறவிடம்.

சிவரூபமாவது சிவனுக்குரூபஞ்சொல்லில்சிவனுமிச்சாஞானக்கிரியா சொரூபனாயிருப்பன் சிவனுக்கிச்சையாவது ஆத்மாக்களை முத்தியிலேயடைவிக்கவேண்டுமென்பதேசிவனுக்குஞானமாவது ஆத்மாக்கள்செய்யப்பட்ட அனாதிகருமங்களனைத்தையுந்திருவுளத்தடைத்திருக்தல் சிவனுக்குக்கிரியையாவது ஆத்மாக்களுக்குன்மசாமீப்பியம்பிறக்கும்படி அனாதியாய்வரப்பட்ட கருமங்களனைத்தையும்பக்குவாபக்குவமறிந்து கூட்டப்புசிப்பித்துத்தொலைப்பித்தருளுதல்.

சிவதரிசனமாவது தான்கருமம்புசிக்குமிடத்துச்சிவன் தனக்கு மூன்று வகையாக நின்றுஉபகரிப்பன் - அதெப்படியென்னில் அவன் அவள் - அது முன்னிலையாகநின்று உபகரிப்பன் இப்படியுபகரிக்குமிடத்துத்தோன்றுகின்றமூன்றுவகையுமொழிந்து அவையிடமாகநின்றுசேஷ்டிப்பித்துக்கான் அக்கருமத்தைப்புசிக்குமிடத்து - தன்னிடத்தும்

றைந்துநின்றுஇந்திரியங்களையுந் தன்னையுஞ் சேஷ்டிப்பித்துத்தனக்குஅந்தக்கருமம் ருசிக்கும்படிச்செய்து இடைவிடாமலூட்டுகிற தீவரத்தைப்பார்ப்பது

சிவயோகமாவது அகண்டபரிபூரணமாகியசிவத்துள்ளே யழுந்தி உள்ளும்புறமுமெண்ணுமற்சிவனையுள்ளபடிகண்டு இரண்டறப்புணர்ந்திருப்பது

சிவபோகமாவதுபராசத்தியினிடமாகநின்றுஅனுபவத்துடனே கலந்துசிவானுபவம்பிறக்கச்சிவனுடனே அக்சினிக்குவெம்மைபோலவும் நீருக்குத்தண்மைபோலவுஞ் சிவத்திலேயழுந்துவது.

---

சிவப்பிரகாசக்கட்டளை

முற்றிற்று.